# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அசல் வழக்கு எண்.269/2020

## வா.சா.2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தில்ஜித் | தொழில் | |
| தகப்பனார் பெயர் | ஸ்டீபன் | மதம் | |
| கிராமம் | | வயது | |
| தாலுகா | | தேதி | 17.02.2023 |

1873 ம் வருடத்திய சட்டம் பிரிவு 10 ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

வா.சா.2 தில்ஜித் தரப்பில் முதல் விசாரணை பிரமாண நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்டது.

நான் வழக்கின் 3ம் தரப்பினர். என் தரப்பில் முதல் விசாரணை பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்கிறேன். அதில் சொல்லப்பட்ட விபரங்கள் அனைத்தும் சரிதான். நான் படித்துப்பார்த்து கையெழுத்து செய்துள்ளேன்.

**2 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் வெள்ளோட்டில் நிரந்தரமாக குடியிருந்து வருகிறேன். 1ம் பிரதிவாதி ஞானபிரகாஷம் வெள்ளோட்டில் குடியிருக்கிறார் என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி திண்டுக்கல் நகரில் குடியிருக்கிறார். 3 முதல் 5 பிரதிவாதிகளின் தகப்பனார் பெயர் தர்மராஜ். மேற்படி தர்மராஜ் 1ம் பிரதிவாதியின் சகோதரர். தாவா சொத்தை வாங்கிய தேதியிலிருந்து மேற்படி தர்மராஜ் தான் குடியிருந்து வாந்தார் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தை வாங்கிய விபரம் எனக்கு நேரடியாக தெரியாது. சொத்தை வாங்கும் பொழுது கல்,கரடு, முட்புதராக இருந்தது. அந்த சொத்தை தர்மராஜும் 3 முதல் 5 பிரதிவாதிகளும் சீர்திருத்தம் செய்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. 3 முதல் 5 பிரதிவாதிகள் அந்த சொத்தில் குடியிருந்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய முதல் விசாரணையில் வாதியின் பங்கை 1ம் பிரதிவாதி பராமரித்து வந்தாக சொல்லியுள்ளேன். அது எந்த தேதியிலிருந்த அவ்வாறு பராமரித்து வருகிறார்கள் என்று எனக்கு தெரியாது. வாதியின் தகப்பனார் உயிருடன் இருக்கும்பொழுதே அவருடைய பிள்ளைகளுக்கு சொத்துகளை பாகம் பிரித்து கொடுத்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல.

என்னுடைய முதல் விசாரணையில் ஊர் பஞ்சாயத்து மூலம் பாகம் பிரித்துக்கொடுக்க கேட்கப்பட்டது என சொல்லியுள்ளேன் அந்த பஞ்சாயத்தில் யார், யார் இருந்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. நான் சொன்னபடி பஞ்சாயத்து எதுவும் நடைபெறவில்லை எனவும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வாதியின் தகப்பனார் வாதியின் பெயருக்கு சுமார் 1 1/2 நிலத்தை கொடுத்துவிட்டார் என்று சொன்னால் அது வாதியின் கணவரின் சுயசம்பாத்திய சொத்தாகும். அந்த சொத்தை வாதியும், வாதியின் கணவரும் சேர்ந்து விற்றுவிட்டு வெளியூர் சென்றுவிட்டார்கள் என்று சொன்னால் சரிதான். வாதி, வாதியின் கணவரும் வெளியூர் சென்று 50 வருடம் இருக்குமா என்று கேட்டால் அது பற்றி எனக்கு ஞாபகம் இல்லை. நான் வாதியின் நெருங்கிய உறவினர். நான் வாதியின் உறவினர் என்பதால் அவருக்கு அனுசர்ணையாக வழக்கில் பொய் சாட்சி அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை இல்லை.</u>**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

P SARAVANAN

Digitally signed by P SARAVANAN
Date: 2023.02.17 17:03:17 +0530

Additional District Judge,

Dindigul.